# 14 குருத்துவம்

சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவப்பட்ட அருளடையாளங்கள் 2 ஆகும்.

1. குருத்துவம்
2. திருமணம்


சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் இரண்டும் மற்றைய அருளடையாளங்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. ஏனெனில் இந்த அருளடையாளங்கள் இரண்டினாலும்,

1. மறைத் தூதுரைப்பணியை ஆற்றுவதற்கும்,
2. இறை மக்கள் சமூகத்தை கட்டியெழுப்பவும்,
3. தமதும், பிறரதும் மீட்புக்காக செயற்பட அழைப்பும், பொறுப்பும் தரப்படுகிறது.

உதாரணமாக,
குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளை இறைநம்பிக்கையில் பயிற்றுவிக்கும் பொறுப்பு திருமணத்தின் மூலம் பெற்றோருக்கு அளிக்கப்படுகிறது. அதன்படி பெற்றோர்கள் பிள்ளைகளைக் குடும்பத்தில் மறை அடிப்படையில் வளர்த்து அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டுகின்றனர். இது குருக்களினதும் பெற்றோரதும் கடமையாகும். மேலும் குடும்பத்தில் பிள்ளைகள் பிறப்பினால் உலகம் அணி செய்யப்படுகின்றது. இது பெற்றோரால் நிறைவேற்றப்படுகிறது. திருமுழுக்கினால் திருச்சபையை வளர்ச்சி பெறச் செய்வது குருக்களின் பணியாகும்.

## குருத்துவம்

கிறிஸ்து திருத்தூதர்களுக்குக் கொடுத்த மறைத்தூதுரைப் பணி அவருடைய இரண்டாம் வருகை வரை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். அச்செயலானது குருத்துவம் என்னும் அருளடையாளத்தின் மூலம் செயற்படுத்தப்படுகிறது. இவ் அருளடையாளத்தின் நிலைகள் மூன்றாகும்.



குருத்துவத்தின் முழு நிறைவு ஆயர் நிலையாகும். அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களின் கண்காணும் தலைவர் அவரே. திருத்தூதர்களின் பிரதி நிதியாகவும், ஆயர்கள் மன்றத்தின் உறுப்பினராகவும், அதிகாரத்துடன் திருச்சபையின் தூதுரைப் பணியில் அவர் பங்கு கொள்ளுகிறார்.

குருக்கள் தமது மேய்ப்புப் பணியை செய்வதற்கு ஆயர்களில் தங்கியிருக்கின்றனர். ஆயர்களிடமிருந்து பெறும் நியமனத்தின் படி, பங்குச் சமூகம் ஒன்றுக்குப் பொறுப்பாக இருந்து பணிபுரிகின்றனர்.

இறைவார்த்தைப் பணி, இறை வழிபாடு, மேய்ப்புப் பணி, இரக்கப் பணி ஆகியவற்றில் ஆயரின் மேய்ப்புக் கண்காணிப்பின் கீழ் திருத்தொண்டர்கள் செயற்படு கின்றனர்.

குருக்கள்

மறைமாவட்ட குருக்கள்

மறைமாவட்டக் குருக்கள் ஆயரின் தலைமைத்துவத்தின் கீழ் பொது நிலையினர் மத்தியில் வாழ்ந்து அவர்களுக்குப் பணி புரிந்து, அவர்கள் இறை அரசை நோக்கிப் பயணிக்க வழிகாட்டுபவர்கள்

துறவற சபைக் குருக்கள்

துறவற சபையின் தலைவராக விளங்கும் ஓர் குருவானவரின் கீழ், குறிப்பிட்ட சபையின் சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றி, விண்ணக வாழ்வை இவ்வுலகில் அனுபவித்து, வாழுவோர்.

மறைமாவட்டக் குருக்களின் வார்த்தைப்பாடுகள் இரண்டாகும்.

1. கீழ்ப்படிதல் (கீழ்ப்படிதல் வாழ்வுக்கு நுழைதல்)
2. குருத்துவ தூய்மை, மணத் துறவு வாழ்க்கை முறை)

1. கீழ்ப்படிதல் :- மறைமாவட்ட ஆயருக்கும் அவருக்குப் பின் வருபவர்களுக்கும் கீழ்ப்படிதல் ஆகும். இந்த வாக்குறுதியை குருக்கள் குருத்துவம் பெறும் நாளில் ஆயர் முன்னிலையில் கொடுப்பர்.

2. குருத்துவ மணத் துறவு என்பது :- திருமணமாகாது தமது முழு வாழ்க்கையையும் இறை அரசுக்காக அர்ப்பணித்தல்.

### குருக்களின் கடமைகள்:

1. மறை உரை வழங்குதல்

2. மக்களுக்கு உண்மையான ஆயன் ஆதல் - மக்களுக்கு செவிமடுத்தல். அவர்களுடைய ஆன்மீக தேவைகளைத் தேடிப் பார்த்தல், பொதுநிலையினருக்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குதலும், அவர்களுடைய ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளுவதும்

3. இறை வழிபாடுகளை நடாத்துதல்- திருவழிபாடு கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கை வாழ்விற்குத் துணையாகும் செபத்தின் ஊடாக கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதன் மூலம், அவர்களிடத்தில் ஆன்மீக மகிழ்ச்சியை உருவாக்குதல்

4. தமது மறைமாவட்ட ஆயரோடு, இணைந்து பணியாற்றுதல்

5. இறைமக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்தல்

### திருத்தொண்டர்களின் கடமைகள்:

1. திருப்பலியிலும், திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் இறைவார்த்தையைப் போதித்தல்
2. திருப்பலியிலும் வேறு திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் ஆயருக்கும், குருக்களுக்கும் உதவுதல்.
3. திருமுழுக்கு வழங்குதல்
4. மரணச் சடங்குகளை நடாத்துதல்
5. திவ்விய நற்கருணை ஆசீர் வழங்குதல்

### திருநிலையினர் மட்டில் பொதுநிலையினரின் கடமைகள்

1. அவர்களுக்காகச் செபித்தலும், அவர்களை மதித்தலும்
2. பங்குச் சபையின் பணிகளில் உதவுதல்
3. இறை அரசைப் பரப்பும் பணிகளில் உதவுதல்
4. மறைக்கல்விப் பணிகளில் ஈடுபட்டு உதவுதல்
5. திருவழிபாட்டுச் செயல்களில் உதவுதல்
6. பொதுப் பணிகளில் உதவுதல்
7. அவர்களைப் பராமரித்தலும், பாதுகாத்தலும்

### குருத்துவத்தை வழங்குதல்

குருவாக ஒருவரைத் திருநிலைப்படுத்த ஆயர்களுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. ஆயர் திருநிலைப்படுத்தப்படுபவரின் தலைமீது கைகளை வைத்துச் செபிப்பதன் மூலமும், அருள் பொழிவு வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலமும் இந்த அருளடையாளத்தை வழங்குவார்.

### குருத்துவத்தைப் பெறத் தகுதிவாய்ந்தவர்கள்

- ✦ திருமுழுக்கும் உறுதிப்பூசுதலும் பெற்றிருத்தல்
- ✦ திருமணமாகாது, வாழ்நாள் முழுவதும் அவ்வாறு வாழத் தீர்மானம் எடுத்த ஆண்கள் (இறையரசுக்காக பிரமச்சாரியாக வாழ்வது)
- ✦ இறை அழைப்பைப் பெற்றிருத்தல்
- ✦ பெற்றோர் திருமண அருளடையாளத்தைப் பெற்றிருத்தல்
- ✦ அவர் நல்ல பண்புகளை உடையவராயிருத்தல்
- ✦ நலமான உடல் நிலையை உடையவராயிருத்தல்
- ✦ தேவையான பயிற்சிக்காலத்தை நிறைவு செய்தவராயிருத்தல்
- ✦ சுயமாக விரும்பிச் செல்லல்

குருவத்தின் நிறைவு ஆயத்துவம். திருத்தூதர்களின் நிலைக்கு தேர்ந்தெடுக்கப்படும் அவர்கள் குருத்துவதற்குரிய அனைத்து அதிகாரங்களையும் பெற்றவர்களாவார். ஆயர்களை நியமிப்பது திருத்தத்தை ஆவர். அவருடன் குழுவாக அவர்கள் மறையையும், விழுமியங்களையும் பற்றிப் போதிக்கும்போது வழுவா வரம் உடையோராகின்றனர்.

**செயற்பாடு**

1. பங்குத் தந்தையின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் ஐந்து எழுதுக.
2. பணிக் குருத்துவத்தின் நிலைகள் மூன்றையும் எழுதுக.

**வாழ்க்கைக்கு**

✝ செபத்திலும், பரிகாரம் செலுத்துதலிலும், துறவறத்தார் தமது சொந்த வாழ்வில் நோயாளர்களுக்காகவும், மறைத்தூதுப் பணிக்காகவும் எத்துணை மாபெரும் பரித்தியாகங்களைச் செய்கிறார்கள்? நீங்கள் அதனைப் பாராட்டுங்கள், நீங்கள் அவர்களின் பணிகளுக்கு உதவுங்கள்.

✝ உங்களுக்கும் அவ்வித தேவ அழைத்தல் உண்டா என சிந்தித்துப் பார்த்ததுண்டா?

✝ தேவ அழைத்தல் அதிகரிக்க வேண்டும் என இறைவனிடம் மன்றாடுங்கள், தேவ அழைத்தலைப் பெற்றிருப்போரின் வாழ்க்கையில் வரும் சோதனைகளை வெற்றி கொள்ள சக்தியையும், அவர்களுடைய பணி வெற்றி பெற இறை அருளைப் பொழியும்படி செபியுங்கள்.